**செய்தி வெளியீடு எண்: 86** **நாள்: 14.12.2023**

# ஆளுநர் மாளிகை, தமிழ்நாடு

## மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் தலைமையில் 'ஆளுநரின் எண்ணித் துணிக' பகுதி - 14 : ஆயுஷ் நிபுணர்கள் மற்றும் பாரம்பரிய மருத்துவர்களுடன் கலந்துரையாடல் சென்னை, ஆளுநர் மாளிகை, பாரதியார் மண்டபத்தில் இன்று (14.12.2023) நடைபெற்றது

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் தலைமையில், ஆளுநரின் எண்ணித் துணிக' பகுதி - 14 நிகழ்ச்சியின் அங்கமாக ஆயுஷ் நிபுணர்கள் மற்றும் பாரம்பரிய மருத்துவர்களுடனான கலந்துரையாடல் சென்னை ஆளுநர் மாளிகையில் உள்ள பாரதியார் மண்டபத்தில் இன்று நடைபெற்றது.

மாண்புமிகு ஆளுநர் நிகழ்ச்சியில் பங்கேற்றவர்களுடனான தமது உரையாடலின் போது, ஆயுர்வேதம், யோகா, யுனானி, சித்தா ஹோமியோபதி எனப்படும் ஆயுஷ் சிகிச்சை முறைகளைப் பாராட்டினார். "நவீன மருத்துவத்தின் வரவுக்கு முன்பே பாரம்பரிய மருத்துவ முறைகள் மனிதகுலத்தை நீண்ட காலமாக பராமரித்து வந்தன. பாரம்பரிய மருத்துவம் நீண்ட கால பரிசோதனை மற்றும் அனுபவத்திற்குப் பிறகு வந்தன. நவீன அறிவியலால் அது ஒருபோதும் அது மறைக்கப்படவோ, ஓரங்கட்டப்படவோ கூடாது. நவீன அறிவியலின் வரவு என்பது, பாரம்பரிய மருத்துவம் உட்பட பாரம்பரிய ஞானம், பழமையான பயனுள்ள சில வைத்திய முறைகள் ஆகியவற்றை மறைக்கும் வகையில் உள்ளது, இது மனிதகுலத்திற்கு நல்லதல்ல. நாம் நவீன அறிவியலை ஏற்றுக்கொண்டாலும், பாரம்பரிய ஞானத்தை இழக்க முடியாது," என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

நவீன மருந்துகளில் சில வரம்புகள் உள்ள பகுதிகள் உள்ளன என்று ஆளுநர் கூறினார். ஆனால், நம்மில் பெரும்பாலானோர் அனுபவித்த பாரம்பரிய மருத்துவம், 'நவீன மருத்துவம்' வழியைக் காட்டாத போது நமக்கு உதவியிருக்கிறது என்று குறிப்பிட்டார். பாரம்பரிய மருத்துவத்தின் அறிவியல்பூர்வ சாத்தியம் பற்றி கேட்கும் போது, "அது பல சவால்களை எதிர்கொள்கிறது. அதை உறுதிப்படுத்த ஆழமான ஆராய்ச்சி அவசியம்," என்று அவர் வலியுறுத்தினார். ஆயுஷ், பாரம்பரிய மருத்துவம் மற்றும் நவீன மருத்துவ அறிவியல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள அடிப்படை வேறுபாட்டையும் இந்நிகழ்ச்சியில் ஆளுநர் எடுத்துரைத்தார். நவீன மருத்துவ அறிவியல் ஒரு குறிப்பிட்ட புள்ளி வரையே செயல்படும். அது சொந்தமாக சில பக்க விளைவுகளைக் கொண்ட குணப்படுத்தும் அணுகுமுறையுடன் உடலை ஒரு இயந்திரமாகப் பார்க்கிறது என்று ஆளுநர் கூறினார். பாரம்பரிய மருத்துவம் உடல் வடிவம், மனம் மற்றும் ஆன்மாவை உள்ளடக்கிய ஒரு முழுமையான அமைப்பாக உடலை எடுத்துக்கொள்கிறது. பாரம்பரிய முறையானது நோயைக் கவனிப்பது மட்டுமல்லாமல், அதன் கவனம் நல்வாழ்வில் உள்ளது என்று ஆளுநர் விளக்கினார். பாரம்பரிய மருத்துவ முறைகள் வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்பதை சரிபார்க்க ஒரு கட்டமைப்பை உருவாக்க வேண்டியதன் அவசியத்தை ஆளுநர் வலியுறுத்தினார்.

நமது மக்களின் ஆரோக்கியம் மற்றும் உடல்நலனில் பாரம்பரிய மருத்துவ முறைகளின் பங்கை கோடிட்டுக் காட்டிய ஆளுநர், நமது மாண்புமிகு பிரதமர் திரு. நரேந்திர மோடியின் முன்முயற்சிகள், ஆயுஷ் மற்றும் பாரம்பரிய மருத்துவத்தின் சந்தைப் பங்கை சுமார் ₹ 2 லட்சம் கோடியாக உயர்த்தி அதிகரித்துள்ளது என்று கூறினார். கோவிட்-19 தாக்கத்துக்குப் பிறகு, பாரம்பரிய மருத்துவத்துக்குப் பெரும் வரவேற்பு உள்ளது என்று ஆளுநர் தெரிவித்தார்.

16-17ஆம் நூற்றாண்டில் உருவான காரணத்தை அடிப்படையாகக் கொண்ட அறிவியலுக்கான நவீன அணுகுமுறையை ஆளுநர் எடுத்துக்காட்டுகளுடன் விளக்கினார். மனித உடல் இயற்பியல் ரீதியாக மனித உடலை அது ஒரு பௌதிக அமைப்பாக மட்டும் பார்த்ததால் அதற்கு சில வரைமுறைகள் இருந்தது என்று ஆளுநர் குறிப்பிட்டார். இன்று, யோகா ஒரு சர்வதேச பயன்பாடாக மாறியிருக்கிறது. யோகா மற்றும் தியானம் உடல் ஆரோக்கியத்தை பேணுகின்றன என்பதை விளக்குவது கடினம். ஆனால், அதை புரிந்து கொள்ள, நாம் அவற்றின் தத்துவத்துக்குள் ஆழமாக செல்கிறோம். ஒரு மனிதனின் நல்வாழ்வு என்பது ஒரு நோய்க்கான சிகிச்சை மட்டுமல்ல; நோய் வராமலேயே தடுப்பதாக இருக்க வேண்டும் என்று ஆளுநர் கூறினார்.

இந்தியா தனக்கென சொந்த அடையாளத்துடன் வளர்ந்து வருவதற்கு இதுவே சரியான தருணம் என்று ஆளுநர் தெரிவித்தார். "இது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் வெளிப்படுவதாக மட்டுமல்லாமல், அதன் பாரம்பரிய விழுமியங்களிலும் மீண்டும் வளர்ச்சி பெற்று வருகிறது. அதனால் தான் நமது மாண்புமிகு பிரதமர் நமது பாரம்பரியத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பல்வேறு நிகழ்ச்சிகளில் பேசி வருகிறார். நமது பாரம்பரியத்தைப் பற்றி நாம் பெருமைப்பட வேண்டும், பாரம்பரிய மருத்துவ முறையே நமது பாரம்பரியம். இன்று, உலகளாவிய நெருக்கடியை தீர்க்க உலகுக்குள்ள ஒரே நம்பிக்கையாக இந்தியா உயர்ந்து நிற்கிறது. அந்த நெருக்கடிகளில் முக்கியமானவை உடல்நலம் மற்றும் நல்வாழ்வாகும். பெருந்தொற்று காலத்தில் நாம் இந்த நெருக்கடியை அனுபவித்தோம். ஆயுஷ் மற்றும் நமது பாரம்பரிய மருத்துவ முறையின் பங்கு முக்கியமானது. நிபுணர்கள், ஆயுஷ் மருத்துவர்கள் மற்றும் மாணவர்கள் தங்கள் துறைகளில் அதிக ஆராய்ச்சி செய்து ஆய்வுக்கட்டுரைகளை வெளியிட வேண்டும்," என்று ஆளுநர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்ச்சியில், ஆயுஷ் நிபுணர்கள் மற்றும் மருத்துவர்களால் "தனிப்பட்ட ஆயுர்வேத பயிற்சியின் முக்கியத்துவம்", "சித்த மருத்துவ அணுகுமுறை மற்றும் புற்றுநோய்க்கு பயன்படுத்தப்படும் மருந்துகள்", "யுனானி சிகிச்சை அணுகுமுறை மற்றும் சிறுநீரக செயலிழப்பில் பயன்படுத்தப்படும் மருந்துகள்", "ஒரு நோயை பரிசோதிப்பதில் ஹோமியோபதி சிகிச்சையின் அணுகுமுறை" போன்ற தலைப்புகளில் நிபுணர்கள் உரையாற்றினார்கள்."

இந்நிகழ்ச்சியில் 33 ஆயுஷ் மருத்துவர்கள், சுகாதார வல்லுநர்கள், இருளர் வைத்தியர்கள், யோகா கலை வல்லுநர்கள் ஆகியோரை ஆளுநர் பாராட்டினார்.

ஆயுர்வேத மருத்துவர் டாக்டர். சுதீர், யுனானி மருத்துவர் டாக்டர். சையத் அமீன், ஹோமியோபதி மருத்துவர் டாக்டர். ரவீந்திரன், சித்த மருத்துவர் டாக்டர். ஜெயப்பிரகாஷ் நாராயண், யோகா நிபுணர் டாக்டர். யுவ பரத், ஆயுஷ் மருத்துவத்துறை பிரமுகர்கள், சிறப்பு அழைப்பாளர்கள், யோகா கலைஞர்கள் மற்றும் நிபுணர்கள். இருளர் பழங்குடி சமூகத்தினர், சுகாதாரத்துறை வல்லுநர்கள், மாணவர்கள், ஆளுநர் மாளிகை அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

...............................................................................................................................................

**ஆளுநர் மாளிகை, சென்னை-22** **வெளியீடு:-**

**நாள்: 14.12.2023** **மக்கள் தொடர்பு அலுவலகம்**